திரு. ப. தீர்த்தராமன் : அந்தச் சங்க நிர்வாக பொறுப்பினை ஏற்றிருக்கிறவர்கள் அதிகமாகக் கடனைப் பெற்று அந்தச் சங்கம் செயல்படாத அளவிற்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களால் அந்தப் பகுதி மக்கள் கடன்கள் பெறுகிற வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுப்பதோடு கூட ஏதாவது சலுகைகள் அளித்தாவது அந்தப் பகுதி மக்கள் கடன்கள் பெறும் வாய்ப்பினை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : வேலியே பயிரை மேய்கிறது என்ற நிலை இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் தான் கூட்டுறவு சட்ட விதி 28 (1)-ன்கீழ் அந்தக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மீதும் அங்குள்ள அதன் உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கைகள் எடுக்க முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது, நோட்டீஸ் அனுப்பப் பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து எக்ஸ்ப்ளனேஷன் பெற்றவுடன் அவர்கள் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

திரு. கா. இரா. சின்னராசு : அந்தக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏதாவது பணம் கையாடல் செய்து பினாமி லோன்கள் போட்டு எடுத்திருக்கிறார்களா? அந்தத் தலைவர் மீது என்னென்ன வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? மேலும் வசூலிக்கப்படாமல் இருக்கும் அந்தக் கடன்களை வசூலிப்பதற்கு அரசு தரப்பில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவர்கள் பினாமி கடன்கள் எடுத்திருக்கிறார்களா என்பது பற்றிய தகவல் இல்லை. இருக்கிற பிரச்சினையெல்லாம், கூட்டுறவுச்சங்கம் விவசாயிகளுக்குக் கொடுத்த கடன்களை வசூலிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. அந்தச் சங்கத் தலைவர், உறுப்பினர்கள் எடுத்து கடன்களைக் கட்டாமல் அந்தச் சங்கத்தை செயலற்ற வகையில் வைத்திருக்கிறார்கள் என்பதுதான் பிரச்சினை. அதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாரனேயில் விவசாயக் கிடங்கு கட்டும் திட்டம்.

*வினா எண். 998—திரு வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிச்சநாயக்கன்பட்டி கூட்டுறவு விவசாய நாணயச்சங்கம் உள்ள மாரனேயில் விவசாயக் கிட்டங்கி கட்ட ஆய்வு செய்ததா ?

(ஆ) அது இதுவரை கட்டப்படாதது ஏன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) கிச்சநாயக்கன்பட்டி கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம் கிடங்கு கட்டுவதற்கான அடிமனை இதுவரை வாங்காத காரணத்தினால் அங்கு கிடங்கு கட்டப்படவில்லை.